தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 370/மா/2023**
நாள்: 05.01.2024

திரு. பா.பசூல் ரகுமான்,
திருநெல்வேலி – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
திருநெல்வேலி மாநகராட்சி – எதிர்மனுதாரர்

திருநெல்வேலி, பாளையங்கோட்டை, நீதிமன்றம் எதிரில், காமராஜ்நகர், முதல் மெயின்ரோடு, கதவு எண்.A.23 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. பா. பசூல் ரகுமான் என்பவரின் 08.12.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 11.12.2023–ல் பெறப்பட்டு, 370/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

<u>ஆணை</u>

திருநெல்வேலி, பாளையங்கோட்டை, நீதிமன்றம் எதிரில், காமராஜ்நகர், முதல் மெயின்ரோடு, கதவு எண்.A.23 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. பா. பசூல் ரகுமான் என்பவர் தனது 08.12.2023 நாளிட்ட மனுவில் கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

" பல்வேறு தேதியிட்ட எங்களது புகார் மனுக்களின் நகல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. நாங்கள் இணைப்பில் கண்ட 3 ஆக்கிரமிப்புகளை அகற்ற கோரி மனு செய்திருந்தோம். புகாரில் தெரிவித்திருந்த இடம் நகரளவை கணக்கில் தெரு என்று தாக்கல் ஆகி உள்ளது என்று பாளையங்கோட்டை வட்டாட்சியர் தெரிவித்துள்ளார். மாநகராட்சி சாலையில் உள்ள ஆக்கிரமிப்புகளை மாநகராட்சி தான் அகற்ற வேண்டும் என்ற நிலையில் திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை மண்டல உதவி ஆணையாளர் அவர்கள் காவல்துறையை அணுகக்கோரி 13.09.2023 பதில் அளித்துள்ளார்கள். ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டிய அலுவலர் அதனை அகற்றி தராமல் காவல்துறை மூலம் நிவாரணம் தேடிக்கொள்ளுமாறு தெரிவித்தது சரியானது அல்ல என்பதால் நடுவர் மன்றத்தில் உரிய நமுனாவில் புகார் இத்துடன் அனுப்பப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

**2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 12.12.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் திருநெல்வேலி மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.**

3) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 18.12.2023 அன்று தென்காசி மாவட்டம், குற்றாலம் சர்க்யூட் ஹவுஸில் நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 12.12.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. பெருமழையின் காரணமாக 18.12.2023 அன்று விசாரணை நடைபெறவில்லை. எனவே 27.12.2023 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் இருவருக்கும் 20.12.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4) மனுதாரர் சார்பாக அவரது பிரதிநிதி 27.12.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:-

" திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை வார்டு எண் 21 தேவலோக தெருவின் முடிவில் எங்களது மையவாடி (Muslim Burial Ground) அமைந்துள்ளது. அங்குள்ள பாளையங்கோட்டை மிலிட்டரி லைன் பள்ளிவாசல், பாளை மார்க்கெட் வடக்கு படை பள்ளிவாசல் மற்றும் ஹைகிரவுண்ட், தியாகராஜநகர், ரஹ்மத் நகர் வடக்கு ஆகிய பகுதிகளில் வாழும் முஸ்லீம்களின் ஜனாஸா (பிரேதம்) அடக்கஸ்தலமாக கடந்த நூறு ஆண்டுகளாக பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேற்கண்ட மையவாடிக்கு தேவலோகத் தெருவில் பெரிய வாசலும், கிருபாகரன் தெருவின் முடிவில் சிறிய வாசலும் உள்ளது. மேற்கண்ட இடத்தில் அமைந்துள்ள பெரிய மற்றும் சிறிய வாசல் வரை எங்களது மையவாடி காம்பவுண்ட் சுவரையொட்டி 10 அடி அகலமுள்ள பாதையை நாங்கள் பயன்படுத்தி வந்தோம். அப்பாதையை அங்கு வசிப்போர் ஆக்கிரமித்து தங்களது வீட்டிற்கான படிக்கட்டுகள் அமைத்தும், தெருவிலேயே தங்களது வாகனங்களை நிறுத்தியுள்ளனர். மேற்கண்ட ஆக்கிரமிப்பால் முஸ்லீம் மக்களின் பிரேத ஊர்வலம் செல்ல அங்கு தடை ஏற்படுகிறது. மேற்கண்ட ஆக்கிரமிப்பு குறித்து மாவட்ட ஆட்சியரிடமும், மாநகராட்சி அலுவலர்களிடமும் புகார் மனுக்கள் அனுப்பப்பட்டுள்ளன. எங்களது மனுவின் மீது இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, தேவலோகத் தெரு மற்றும் கிருபாகரன் தெருவில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி முஸ்லீம் மக்களின் பிரேத ஊர்வலம் தங்குதடையின்றி செல்ல ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் இந்நேர்வு தொடர்பான புகைப்படங்களை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**5) திருநெல்வேலி மாநகராட்சியின் நகர் சார் ஆய்வாளர் 27.12.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார்.**

" மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை தேவலோக தெரு மற்றும் கிருபாகரன் தெருவில் மாநகராட்சி இடத்தை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள படிக்கட்டுகள் அகற்றப்படவில்லை எனவும் மேலும் மேற்கண்ட தெருக்களில் மைய வாடிக்குச் செல்லும் முஸ்லீம் மக்களின் பிரேதம் செல்லும் வழியில் நிறுத்தப்பட்டுள்ள வாகனங்களால் பிரேதம் செல்வதற்கு எவ்வித இடையூறும் இல்லை எனவும் தெரிவித்துக்கொள்கிறேன். எனினும் மேற்கண்ட 2 தெருக்களையும் அளந்து, அங்குள்ள ஆக்கிரமிப்புகளை 2 வார காலத்திற்குள் அகற்றப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் பாளையங்கோட்டை மண்டல அலுவலக உதவி ஆணையரின் 15.12.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொண்டு இந்நேர்வு தொடர்பான புகைப்படங்களை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6) திருநெல்வேலி மாநகராட்சி உதவி ஆணையர் தனது 15.12.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

" திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை வார்டு, வார்டு 36 நெல்லை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகம் அருகே உள்ள மைய வாடிக்கு செல்லும் தெருவில் ஆக்கிரமிப்பு உள்ளதாலும் அப்பகுதி ஆக்கிரமிப்புகளை அகற்ற கோரி விண்ணப்பித்துள்ளதை அடுத்து நகர் சார் ஆய்வாளர் அவர்களின் அறிக்கைக்கு அனுப்பப்பட்டது. மேற்கண்ட பகுதியை நகர்சார் ஆய்வாளர் பார்வையிட்டு அவர்களின் பதிவேடுகளில் உள்ளவாறு மனுவில் குறிப்பிடும் தெருவில் மையவாடி வாசல் முன்பு இருசக்கர வாகனம் நிறுத்தியும் மற்றும் தற்காலிகமாக செங்கற்கள் அடுக்கி வைத்தும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாக அறிக்கை செய்துள்ளார். மேலும் மேற்படி இடம் என்னால் (உதவி ஆணையர்) பார்வையிடப்பட்டது. மேற்படி இடத்தில் இரு சக்கர வாகனம் மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மேலும் ஒரு வீட்டின் படிக்கட்டு மட்டும் சுமார் 80 செ.மீ. அளவுக்கு தெருவில் நீண்டு உள்ளதாக தெரிய வருகிறது. மேற்படி ஆக்கிரமிப்புகளால் இதர வாகனங்கள் செல்ல இடையூறு ஏதும் இல்லை. ஆனால் இதுகுறித்து தெருவில் உள்ளவர்களிடமும், ஜமாத் உறுப்பினர்களிடமும், என்னால் நேரில் விசாரணை செய்யப்பட்டதில், அருகில் அடுத்த தெருவான தேவலோக தெரு வழியாக நெடுங்காலமாக பயன்படுத்தி வந்துள்ளனர். தற்பொழுது கிருபாகரன் தெரு வழியாக பிரேதம் கொண்டு செல்வதற்கு இருதரப்பினரிடையே பிரச்சனை உள்ளதாக தெரிய வருகிறது.

கிருபாகரன் தெரு வழியாக பிரேதம் கொண்டு செல்ல பயன்படுத்தப்படும் பட்சத்தில் சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்பட வாய்ப்புள்ளதாக தெரிய வருவதால் காவல்துறை மூலம் நடவடிக்கை மேற்கொள்ள மனுதாரரின் மனுவிற்கு பதில் தெரிவிக்கப்பட்டது என்ற விபரம் சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

மேலும் மேற்படி அனைத்து 'மனுக்களையும் பார்வையிட்டதிலும் மற்றும் இரு தரப்பினரையும் விசாரணை செய்ததிலும் மேற்படி கிருபாகரன் தெரு வழியாக கடந்த 30 ஆண்டுகளுக்கு மேல் பிரேதம் ஏதும் கொண்டு செல்வதில்லை என்ற விபரம் தெரிய வருகிறது. இந்தப் பாதை வழியாக அடக்கம் சம்பந்தப்பட்ட பொருட்களோ, பிரேதமோ கொண்டு செல்லும் பட்சத்தில் சட்டம் மற்றும் ஒழுங்கு பிரச்சனை ஏற்பட வாய்ப்புள்ளதால் இது குறித்து காவல்துறை மற்றும் வருவாய் துறை மூலம், இருதரப்பினரிடையே அமைதி பேச்சு வார்த்தை நடத்தி இப்பிரச்சனைக்கு சமரச தீர்வு காணலாம் என்ற விபரத்தையும் பணிவுடன் சமர்ப்பித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**7) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் அவரது பிரதிநிதியின் வாக்குமூலம், திருநெல்வேலி மாநகராட்சி நகர்சார் ஆய்வாளரின் வாக்குமூலம், திருநெல்வேலி மாநகராட்சி உதவி ஆணையரின் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:**

மனுதாரர் திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வார்டு எண்.21, தேவலோக தெருவின் முடிவில் உள்ள மையவாடி (Muslim Burial Ground)க்கு அந்தப் பகுதிகளில் வாழும் முஸ்லீம்களின் ஜனாஸா (பிரேதம்) அடக்க ஸ்தலத்திற்கு செல்லும் பாதையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி முஸ்லீம் மக்களின் பிரேத ஊர்வலம் தங்கு தடையின்றி செல்ல ஆவன செய்யுமாறு கோரியுள்ளார்.

மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை தேவலோக தெரு மற்றும் கிருபாகரன் தெருவில் மாநகராட்சி இடத்தை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள படிக்கட்டுகள் அகற்றப்படவில்லை எனவும் மேலும் மேற்கண்ட தெருக்களில் மைய வாடிக்குச் செல்லும் முஸ்லீம் மக்களின் பிரேதம் செல்லும் வழியில் நிறுத்தப்பட்டுள்ள வாகனங்களால் பிரேதம் செல்வதற்கு எவ்வித இடையூறும் இல்லை எனவும் ஒரு வீட்டின் படிக்கட்டு மட்டும் சுமார் 80 செ.மீ. அளவுக்கு தெருவில் நீண்டு உள்ளதாகவும் இது தொடர்பாக நேரில் விசாரணை செய்யப்பட்டதில், அருகிலுள்ள அடுத்த தெருவான தேவலோக தெரு வழியாக நெடுங்காலமாக பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது எனவும் தற்பொழுது கிருபாகரன் தெரு வழியாக பிரேதம் கொண்டு செல்வதற்கு இருதரப்பினரிடையே பிரச்சனை உள்ளதாக தெரிய வருகிறது எனவும் இந்தப் பாதை வழியாக பிரேதம் கொண்டு செல்லும் பட்சத்தில் சட்டம் மற்றும் ஒழுங்கு பிரச்சனை ஏற்பட வாய்ப்புள்ளதால் இது குறித்து காவல்துறை மற்றும் வருவாய் துறை மூலம், இருதரப்பினரிடையே அமைதி பேச்சு வார்த்தை நடத்தி இப்பிரச்சனைக்கு சமரச தீர்வு காணலாம் என்பதை திருநெல்வேலி மாநகராட்சி உதவி ஆணையர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மனுதாரர் 8.12.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்திற்கு இப்பொருள் தொடர்பாக மனு சமர்ப்பிப்பதற்கு முன்னரே மாநகராட்சிக்கு புகார் அளித்துள்ளார். மாநகராட்சி ஆக்கிரமிப்புகளை அகற்றிடாமல் சட்டம் மற்றும் ஒழுங்கு பிரச்சனை காரணம் காட்டி இது குறித்து காவல் துறை மற்றம் வருவாய் துறை மூலம் இப்பிரச்சனைக்கு சமரச தீர்வு காணலாம் என தெரிவித்துள்ளது திருநெல்வேலி மாநகராட்சி அலுவலர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள், வழிகாட்டுதல்கள் ஆகியவற்றை முறையாக கடைப்பிடித்து பொதுமக்களுக்கு செய்ய வேண்டிய பணிகளை சரிவர செய்யாமல் இருப்பது தங்களது கடமையை தட்டிக் கழிக்கும் செயலாகவே கருதவேண்டியுள்ளது என்பதை இம்முறைமன்ற நடுவம் பதிவு செய்கிறது. இது மிகவும் கண்டிக்கத்தக்கது. மேலும் உடல் அடக்கம் செய்ய குறிப்பிட்ட தெரு வழியாக எடுத்துக்கொண்டு செல்லக் கூடாது என தெரிவிப்பதும் சரியான தீர்வாகாது, அது உரிய முறையல்ல என்பதையும் இம்முறைமன்ற நடுவம் சுட்டிக்காட்ட விழைகிறது.

Tamil Nadu Urban Local Bodies Act, 1998 Section, 118 and 128 ல் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

Section 118: Vesting of public streets and their appurtenance with municipality –

x x x x x x

x x x x x x

(6) When any building or other structure or any fixture in any form attached to a building causes a projection, encroachment or obstruction over any public street or other public places vested in the municipality, the Commissioner may, in accordance with such bye-laws made by the council for this purpose, by a written notice, require the owner or the occupier of the building to remove such encroachment or obstruction.

**<u>Section 128: Power to Remove encroachment from Public Place</u>**

**128 (1) The Commissioner may -**

(a) Remove without any notice any movable temporary structure, enclosure, stall, booth, any article whatsoever hawked, exposed or displayed for sale

or any other thing whatsoever by way of encroaching street or public place or the [land belonging to or vested with the municipality] with the municipal limit;

(b) Remove any immovable structure whether permanent or of temporary nature encroaching the street or public place or the [land belonging to municipality or vested with the municipality] within the municipal limit, after issuing a show cause notice for such removal, returnable within a period of seven days from the date of receipt thereof:

Provided that the Commissioner shall consider any representation received within the time limit, before passing final orders.

எனவே திருநெல்வேலி மாநகராட்சியானது Tamil Nadu Urban Local Bodies Act, 1998ன்படி நடவடிக்கை மேற்கொண்டு மனுதாரர் குறிப்பிடும் ஆக்கிரமிப்புகளை அகற்ற உரிய சட்டபூர்வமான நடவடிக்கைகளை எடுக்குமாறு திருநெல்வேலி மாநகராட்சி ஆணையரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

The Commissioner, Tirunelveli Corporation is directed to ensure compliance with the Forum's orders in evicting the encroachments on the way to the Burial ground specified in the petition. The Zonal Officers are duty bound to carryout their duties dispassionately without passing the buck to the Police wantonly by abdicating their responsibility in a clever manner as could be seen from the correspondence in the file. A specific time frame should be chalked up and the encroachments should be removed lawfully without continuing the hindrance to the funeral passage on the way. The Director of Municipal Administration is also instructed to issue necessary directions to the Tirunelveli Corporation to perform its duty diligently in the issue.

2024–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 05–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.பா.பகூல் ரகுமான்,
A.23, முதல் மெயின் ரோடு,
காமராஜ் நகர்,
(நீதிமன்றம் எதிரில்)
பாளையங்கோட்டை – 627 002.
திருநெல்வேலி.

2) ஆணையர்,
திருநெல்வேலி மாநகராட்சி,
திருநெல்வேலி.

3) உதவி ஆணையர்,
திருநெல்வேலி மாநகராட்சி,
பாளை மண்டல அலுவலகம்,
திருநெல்வேலி.(ஆணையர் வழியாக)

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

5) இணை இயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்